# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | சிவகங்கை | காலம் : | 08/03/2023 | முதல் | 12/03/2023 |
| அறிக்கை எண் : | 019/ 2023 | வெளியீட்டு நாள் : | 07/03/2023 | | |

## சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 18°-23° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (02.03.2023 முதல் 06.03.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –12-03-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 02/03 | 03/03 | 04/03 | 05/03 | 06/03 | தேதி | நாள்-5 08/03 | நாள்-5 09/03 | நாள்-5 10/03 | நாள்-5 11/03 | நாள்-5 12/03 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 35 | 35 | 35 | 36 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 36 | 36 | 37 | 37 | 37 |
| 23 | 18 | 22 | 23 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 22 | 22 | 23 | 23 |
| 4 | 2 | 3 | 3 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 2 | 0 | 0 | 0 | 0 |
| 70 | 54 | 69 | 67 | 73 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 39 | 34 | 40 | 45 | 32 | | 30 | 30 | 30 | 30 | 30 |
| 12 | 9 | 13 | 7 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 8 | 6 | 6 | 6 |
| வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | **காற்றின் திசை** | **வட வடக்கு** | **வட வடக்கு** | **வட கிழக்கு** | **தென் கிழக்கு** | **கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலையானது 36°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் தெளிவாக காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், வடகிழக்கு, தென்கிழக்கு மற்றும் கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

வெப்பத்திலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாக்க தினமும் போதுமான அளவில் தாதுக் கலவையினை கால்நடைகளுக்கு கொடுக்க வேண்டும். குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக் கலவையினை கொடுப்பது மிகவும் அவசியமாகும். பகல் நேரங்களில் மாட்டு கொட்டகைகளின் பக்கவாட்டில் ஈரமான சணல் சாக்குககளை கட்டி விடவும். கால்நடைகளுக்கு நாள் ஒன்றுக்கு 80 முதல் 100 லிட்டர் தண்ணீரை 4 தவணையாக பகிர்ந்து கொடுக்கவும்.

*கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கோடைகாலங்களில் ஏற்படும் தீவனப்பயிர் பற்றாக்குறையினை தவிர்க்கும் வகையில் பாசன வசதியுள்ள விவசாயிகள்* 10 *சதவீத நிலத்தில்* கம்பு நேப்பியர் தீவனப்பயிர்களை சாகுபடி செய்யலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்** : கத்தரி, **தக்காளி**, கால்நடை

கத்தரி:

- காய்கறிப் பயிர்களில் வேர் முடிச்சு மற்றும் மொச்சை வடிவ நூற்புழு கட்டுப்படுத்த எக்டருக்கு 400 கிலோ வேப்பம் பிண்ணாக்கு இடலாம் .

**தக்காளி**:

- தக்காளியில் இலைக்கருகல் நோய் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் என்ற அளவில் சூடோமோனாஸ், டிரைக்கோடெர்மா விரிடி, பேசிலஸ் சப்டிலஸ் ஆகியவற்றை 10 நாட்கள் இடைவெளியில் இலைவழித் தெளிப்பாகவோ அல்லது வேர்பகுதியில் ஊற்றி விடலாம்.

கால்நடை:

- நிலவும் வெப்பமான பருவசூழ்நிலையில் கால்நடைகளுக்கு சுவாசக்கோளாறு, வாய்வழியாக சளி வெளியேற்றம் போன்ற பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.
- இவற்றிலிருந்து விவசாயிகள் தங்களின் மாடுகளை பாதுகாக்க கருப்பட்டி, வெங்காயம், சீரகம் இவை மூன்றிலும் சமஅளவு எடுத்து உரலில் ஆட்டி உருண்டையாக உருட்டி, காலை மாலை என இருவேளைகளிலும் கொடுக்க வேண்டும்.